TEMASEK



எங்களின் 2030 பயணம்

# சிக்கலான உலகில் எங்களின் திசைகாட்டி

தெமாசெக் நீண்டகாலத்திற்கு நீடித்து நிலைக்கவல்ல மதிப்பை வழங்க முயற்சி எடுக்கிறது — அதனால் ஒவ்வொரு தலைமுறையும் செழிப்படையும்.

இந்த இலக்கை அடைவதற்காக நாங்கள் புத்தாக்கத்திலும் வளர்ச்சியிலும் முதலீடு செய்ய நிதி மூலதனம் வழங்குகிறோம்; மனிதனின் ஆற்றலில் முதலீடு செய்ய மனிதவள மூலதனம் வழங்குகிறோம்; சமுதாயங்களின் மீள்திறனை வளர்க்க சமூக முன்னேற்றத்திற்காகச் சமூக மூலதனம் வழங்குகிறோம்; எதிர்காலத் தலைமுறைகளுக்காக நம் பூமியைப் பாதுகாக்க இயற்கை மூலதனம் வழங்குகிறோம்.

## நிதி மூலதனம்

நல்லன செய்ய நன்றாகச் செய்கிறோம்



**Adyen** எனும் நிதித் தொழில்நுட்ப நிறுவனம், கட்டணப் பரிவர்த்தனை ஆற்றல்கள், தரவு அடிப்படையிலான உள்ளாய்வுகள் மற்றும் நிதித் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து வழங்குகிறது

## மனித மூலதனம்

மனித உள்ளாற்றலுக்குக் கைகொடுக்கிறோம்



**Temus** நிறுவனம் அமைப்புகளின் மின்னிலக்க உருமாற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் Step IT Up திட்டம், தொழில்நுட்பத் திறன் இல்லாதவர்கள் தொழில்நுட்பத் திறனாளியாக மாறுவதற்கு ஆதரவளிக்கிறது



## இயற்கை மூலதனம்

இயற்கையோடு ஒத்திருக்கிறோம்



**SarvaGram** இந்தியாவின் கிராமப்புறக் குடும்பங்களுக்குக் கடன்கள், காப்புறுதிச் சேவைகள் மற்றும் விவசாய இயந்திரமயச் சேவைகள் ஆகியவற்றை வழங்குகிறது

## சமூக மூலதனம்

சமூக மீள்திறனை வளர்க்கிறோம்



**பொறியியல் துறைக்காக மதியிறுக்கத் திறனாளர்களை வளர்க்கும் (GATES)** திட்டம், மதியிறுக்கம் உள்ளவர்களைப் பொறியியல் துறையில் வேலைக்குச் சேர்க்கிறது

## மேம்பட்ட உலகுக்கு வழிகோலுவோம்

தெமாசெக் அறநிதிக்கு தெமாசெக் வழங்கும் லாப நோக்கற்ற அன்பளிப்புகள், தெமாசெக் அறநிறுவனமும் மற்ற லாப நோக்கற்ற அமைப்புகளும், சிங்கப்பூரிலும் ஆசியாவிலும் அதற்கு அப்பாலும், **மக்களை இணைக்கவும், சமூகங்களுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிடவும், நமது உலகைக் காக்கவும், ஆற்றல்களை வளர்க்கவும்** துணை புரிகின்றன — **அதனால் ஒவ்வொரு *தலைமுறையும்* செழிப்படையும்**

### TEMASEK TRUST

தெமாசெக்கும் மற்ற நன்கொடையாளர்களும் வழங்கும் கொடை அன்பளிப்புகளின் **நிதி நிர்வாகத்தையும் நீடித்து நிலைக்கவல்லப் பகிர்ந்தளிப்புகளையும்** கண்காணிக்கிறது. ஒருமித்த எண்ணமுள்ள பங்காளிகளுடன் ஒத்துழைப்பதன்மூலம் **கொடையை வளர்ப்பதற்கும் முதலீட்டு விளைவுகளை உண்டாக்குவதற்கும் புதிய பாதைகள் அமைப்பதையும்** இலக்காகக் கொண்டுள்ளது



### TEMASEK SHOPHOUSE

**பொது நலனுக்கு** வழிவகுக்கும் முனைப்புகளை ஊக்குவித்து, மேம்படுத்தி, புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்லும் சமூக விளைவுகள் மையம்

### TEMASEK FOUNDATION

**புதுமையான மனநல சிகிச்சைக்கு உறுதுணை**

மனச்சோர்வுக்கு ஊடுருவல் அற்ற, தனிப்பட்ட முறையிலான சிகிச்சையை உருவாக்க மனநல மருத்துவமனைக்கும் சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்திற்கும் ஆதரவளிக்கப்படுகிறது



### TEMASEK LIFESCIENCES LABORATORY

**நீடித்து நிலைக்கவல்ல அரிசி விவசாயத்தில் மேம்பாடு**

வளங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்தி, கரியமிலவாயு வெளியாக்கத்தைக் குறைத்து, பருவநிலையால் பாதிப்படையாத விளைச்சலை அடைய புதுவித வழிமுறைகள் உருவாக்கப்படுகின்றன



### STEWARDSHIP ASIA

**பொறுப்பார்ந்த தலைமைத்துவம் 25**

ஆசிய பசிபிக் வட்டாரத்தில் உன்னதப் பொறுப்பான்மையை வெளிப்படுத்திய அமைப்புகளின் முனைப்புகள் காட்சிப்படுத்தப்படுகின்றன




### Mandai NATURE

**இராஃபிள்ஸ் பட்டையிட்ட மந்தி இனம் பாதுகாப்பு**

சிங்கப்பூரில் எஞ்சியுள்ள மூன்றே மூன்று பூர்வீக மந்தி இனங்களில் ஒன்றான பட்டையிட்ட மந்திகளைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்படுகிறது



### CIIP Centre for Impact Investing and Practices

**விளைவுமிக்க முதலீடு, நடைமுறை நிலையம் (CIIP)**

ஆசியாவிலும் அதற்கு அப்பாலும் அறிவாற்றலைப் பகிர்வதன் மூலமும், சம்பந்தப்பட்ட தரப்பினரை ஒன்றுசேர்ப்பதன் மூலமும் விளைவுமிக்க முதலீட்டையும் நடைமுறைகளையும் மேம்படுத்துகிறது




### Philanthropy Asia Alliance

**ஆசியக் கொடையாண்மை கூட்டமைப்பு (PAA)**

பல்வேறு துறைகளுக்கிடையில் பங்காளித்துவங்களை வளர்ப்பதன் மூலம் ஆசியாவில் கூட்டுக் கொடையாண்மையைத் தூண்டுகிறது. இவ்வமைப்பின் வருடாந்தர *ஆசியக் கொடையாண்மை மாநாடு* மேம்பட்ட உலகை உருவாக்க முற்படுகிறது

